**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

**C.C. No: 201 of 2024**

**DATE : 25.11.2025**

**Depositions of witness for Prosecution**

**PW: 7**

| **Name** | ராஜா | **Caste** | |
|---|---|---|---|
| **Father/ Husband's Name** | | **Calling** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of November 2025**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு குமார் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> –

நான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து தற்பொழுது பணி ஓய்வில் இருந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, கடந்த 18.08.2018 அன்று மதியம் 2 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த பொழுது, ராஜாராம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அதன் தன்மைக்கேற்ப, நிறைய குற்ற எண் 268/2018, சட்டப்பிரிவுகள் 448, 427, 294(b) மற்றும் 506(ii) IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் முன்னிலையில் சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

02.08.2018 அன்று நடைபெற்ற சம்பவத்திற்காக 16 நாட்கள் கழித்து 18.08.2018 அன்று புகார் மனு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். 16 நாட்கள் கால தாமதமாக புகார் மனு கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் அன்றைய தினமே புகார் மனு கொடுக்க வாய்ப்பு உள்ளது என்றால் புகார்தாரரின் மனைவிக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதால் புகார் மனு சரியான நேரத்தில் கொடுக்கப்படவில்லை. நடைபெறாத சம்பவத்திற்காக காலதாமதமாக இந்த வழக்கில் புகார் மனு பின்னிட்டு தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சம்பவத்திற்கும் இந்த வழக்கின் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு